உ

கடவுள் துணை.

பனைமரசோபனம்

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். ஸி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914

17-18 காளத்தியப்ப முதலி வீதி மதராஸ் என். ஸி.

134

விளம்பரம்.

மணிமந்திர வயித்திய சேகரம்.

இந்நூலை சகலஜெனங்களும் சுலபமாய்

தெரிந்துக்கொள்ளலாம்.

சோதிடம், மாந்திரீகம், வைத்தியம் கற்றுணர்ந்த வல்லவர்களும், இனிகற்றுணர விருப்பமுள்ளவர்களும், கண்ணுற் கண்டுக் களித்து ஆனந்தமடையும் பொருட்டாய், மணி, யென்னும், சோதிடமும், மாந்திரீகமும், வைத்தியமும், இம்மூன்றும், பற்பலநூற்களைக்கொண்டு ஆராய்ந்து புதைநிதயம்போல் நன்றாகச் சேர்த்து தாங்கள் தாங்களே, தெரிந்துக் கொள்ளும்படியாய் வசனகாவியமாய் எழுதி, அரிச்சுவடிபோல ஒவ்வொன்றையும் தனிபிரித்து வெகுநேர்த்தியாய் அச்சிட்டிருக்கின்றது.

இதில்மாந்திரீகம் ஆரூடத்திற்கும் ஆங்காங்கு, லெத்தகிராப் சக்கரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

நல்ல கிளேஸ்கடிதத்தில் பதிப்பிக்கப்பட்டது புல்கலிக்கோ பயிண்டு செய்தது.

இதன்விலை ரூபா-1.

உ

கடவுள் துணை.

பனைமரசோபனம்.

சோபனமடிசோபனமே சிவசோபனந்தமிழ்பாட
அச்சோடிபெண்களா சோபனமே அம்மாடி பெண்களாசோபனமே
பனைமரமேபனைமரமே யேன்வளர்ந்தாய்பனைமரமே
நான்வளர்ந்தகாரியத்தை நாட்டாரேசொல்கிறேன்கேள்
அறியாவிட்டால்சொல்லுகிறேன் அச்சோடிபெண்களாசோபனமே
தெரியாவிட்டால்சொல்லுகிறேன் தேசமெங்குஞ்சோபனமே
பராமரியாயிருக்காமல் பட்சமுடன்கேட்டிருங்கள்
படுக்கப்பாய்நானுவேன் பாய்முடையதோப்பாவேன்
வெட்டநல்விறகாவேன் வீடுகட்டவாரையாவேன்
பட்டுப்போறபயிர்களுக்கு பலத்தநல்லவேத்தமாவேன்
அட்டடுக்குபெண்களுக்கு அடுப்பெரியமட்டையாவேன்

கட்டநல்லகயிறாவேன் கன்றுகட்டத்தும்பாவேன்
மட்டமுள்ளவுரியாவேன் மாடுகட்டத்தும்பாவேன்
பசுவணைக்குங்கயிராவேன் பால்தயிருக்குரியாவேன்
வாரவட்டைநானாவேன் வலச்சல்களுந்தானாவேன்
தொட்டிலுக்குகயிராவேன் துள்ளியாடவுஞ்சலாவேன்
கிணத்துஜலமொண்டுவரக் கைதாம்புக்கயிராவேன்
பலத்தசுமைபாண்டங்கட்குப் பிருமணையுந்தானாவேன்
ஏழைநல்லமங்கிலுக்கு யேற்றக்கா தோலையாவேன்
மங்கிலியப்பெண்களுக்கு மஞ்சள்பெட்டிநானாவேன்
பாக்கியமுள்ளபெண்களுக்கு பாக்குப்பெட்டிநானாவேன்
விர்ந்தாப்பியபெண்களுக்கு வெற்றிலைப்பெட்டிநானாவேன்
குணமுள்ளபெண்களுக்குக் குங்குமப்பெட்டிநானாவேன்
பெரியோர்கள்தோள்மேலே திருப்பக்கூடைநானாவேன்
திரும்பக்கூடைக்குள்ளிருக்குந் திருமண்பெட்டிநானாவேன்
திருப்பாவைசேவிப்போர்க்கு திருத்துழாய்ப்பெட்டிநானாவேன்
எழுதுகின்றபிள்ளைகட்கு யெழுத்தாணிகூண்டாவேன்
வாசிக்கின்றபிள்ளைகட்கு வண்ணநல்லதடுக்காவேன்

ஓதுகின்றபிள்ளைகட்கு ஓலைத்தடுக்காவேன்
நனைந்துவருவார்க்கு ஜம்பக்குடைநானாவேன்
பசித்துவருவார்க்குப் பனம்பழமுநானாவேன்
களைத்துவருவார்க்கு கள்ளமுதம்நானாவேன்
பாலர்பெரியோர்க்குப் பனம்பழநீர்நானாவேன்
சித்திரக்கோடையிலே சிறந்தநல்லநுங்குநாவேன்
காளையர்க்குங்கன்னியர்க்குங் களைதீர்க்கும்விசிறியாவேன்
ஈண்டப்பிள்ளைதாய்மார்க்கு கற்பக்கட்டிநான்தருவேன்
கன்றீன்றமங்கையர்க்குக் கற்பக்கட்டியானாவேன்
வேலிகட்டகயிறாவேன் விறகுகட்டநாராவேன்
வருஷத்துக்கோர்தினத்தில் சரஸ்வதியம்மன்பூசைசெய்து
ஆமெழுகிக்கோலமிட்டு அச்சோடிபெண்களாசோபனமே
மணையலம்பிக்கோலமிட்டு மணைநிறையபுராணம்வைத்து
பூவும்புதுமலரும் பொன்னறுகும்அட்சதையும்
அட்சதையுமலரெடுத்து அர்ச்சிப்பாருலகமெல்லாம்
விஸ்தாரமாய்ரண்டாநாள் விஜயதசமியென்றுசொல்லி
நாட்டிலுள்ளபிள்ளைகட்கு நாள்பார்த்துமுகூர்த்தமிட்டு
எண்ணெய்தேய்த்துநீராட்டி யியல்புடனேயலங்கரித்து

மாலைபோட்டுசந்தனம்பூசி மடிநிறையபுஸ்தகம்வைத்து
மஞ்சள்படுத்துவர மங்களங்கள்பாடிவர
காம்புநறுக்கியவர் கணுக்காம்புவேரறுத்து
பக்கமிருபுறம்வாரி பல்வரிசைகாம்பரிந்து
என்னைத்திருத்தியவர் எழுத்தாணிகைபிடித்து
ஆணிப்பொன்னெழுத்தாணி அழகாகவேபிடித்து
வெள்ளிகட்டெழுத்தாணி வேடிக்கையாய்கைப்பிடித்து
ஆரியரும்வேதியரும் ஹரிநமோவென்றெழுதி
ஹரிஹரியென்றெழுதி அர்ச்சிப்பாரென்னையவர்
ஹரிச்சுவடியென்றாலே வரைக்காய்ப்பாடமென்றாலே
எண்சுவடியென்றாலே குமிழாற்றுமென்றாலே
தர்க்கங்களென்றாலே சாஸ்திரங்களென்றாலே
இராமாயணமென்றாலே பாரதமுமென்றாலே
பாகவதங்களென்றாலே பலசாஸ்திரங்களென்றாலே
திருவாய்மொழியென்றாலே திவ்யபிரபந்தமென்றாலே
நாலுவேதமுமென்றாலே ஆறுசாஸ்திரமென்றாலே
கங்கைக்கும்லங்கைக்கும் கீர்த்திமிகப்பெற்றிருப்பேன்
மங்கையர்க்குமன்னவர்க்கு மனமறிவதுமென்றாலே

வர்த்தகருஞ்செட்டிகளும் வழியறிவதுமென்னாலே
கணக்கர்களுமுதலிகளுங் கணக்கறிவதுமென்னாலே
பலசரக்குமண்டிகளில் பத்திரமாய்நானிருப்பேன்
காசிக்கடைசவளிக்கடையில் கருத்துடனேநானிருப்பேன்
மொடுக்கல்வாங்கலுள்ளவர்க்கு குறிப்புசொல்லிவாங்கிவைப்பேன்
கார்த்திகைமாதத்திலே கருத்தறிந்தபிள்ளைகட்கு
திருத்தமுள்ளமாபலியாய்த் தெருவெங்குஞ்சுற்றிடுவேன்
பட்சமுள்ளவாசலுக்குப் பட்டோலைநானாவேன்
காதத்துபெண்களுக்குக் காதோலைநானாவேன்
தூரத்துப்பெண்களுக்குத் தூதோலைநானாவேன்
கலியாணவாசலுக்குக் கட்டோலைநானாவேன்
சீமந்தவாசலுக்கு சீருடனேநான்போவேன்
பிள்ளைபிறந்ததென்றால் பெருமையுடன்நான்போவேன்
மைந்தன்பிறந்தானென்றால் மகிழ்ச்சியுடன்நான்போவேன்
அரண்மனையில்நானிருப்பேன் ஆஸ்தானத்தில்நானிருப்பேன்
மச்சுள்ளேநானிருப்பேன் மாளிகையில்நானிருப்பேன்
குச்சுள்ளேநானிருபபேன் குடிசைக்குள்ளேநானிருப்பேன்
எருமுட்டைகுதிரையெல்லாம் ஏந்திகொண்டுநானிருப்பேன்

ஏரிக்கரைமேலே யென்னாளும்விற்றிருப்பேன்
எமலோகம்போனாலு மெல்லார்க்குந்தெரியவைப்பேன்
சிவலோகம்போனவற்கு சீட்டோலையாயிருப்பேன்
சகலமானகாரியத்துக்கும் சாக்கிரதையாயிருப்பேன்
இத்தனைக்குமுதவியென்று என்னையையன்சிருஷ்டித்தான்
கற்பகவிருக்ஷமெனக் கைலையினுந்தானமர்ந்தேன்
திருப்பானையூர்தன்னிற் சிவன்புனைந்தானெந்நாமம்
நான்வளர்ந்தசேதிதனை நலமுடனேகேட்டவரும்
பாடிப்படித்தவரும் பட்சமுடன்கேட்டவரும்
சொல்லிப்படித்தவரும் சுகிர்தமுடன்கேட்டவரும்
அச்சிலடித்தவரும் அழகுசெய்யைனயாள்பவரும்
எல்லையுளளந்த வெம்பெருமான்கோத்திரம்போல்
ஆலைபோலேதழைத்து ஆதிசிவன்போல்வாழ்வார்
ஊழியூழிகாலமட்டும் உலகுதனிலேயிருந்து
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்.

பனைமரசோபனம்

முற்றிற்று.